MAY 2024 **P/ID 35324/PTL3P**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. உரைக்கு உரை எழுதக் காரணமென்ன?

2. அரும்பதவுரைகள் – பொருளுரைக்க.

3. புலமைச் செல்வர் யார்?

4. உரைச் சிறப்புப் பாயிரம் என்றால் என்ன?

5. காண்டிகையுரை – பொருள் தருக.

6. மதிப்புரை என்பது யாது?

7. இளம்பூரணர் எழுதிய உரைகளின் இயல்பு எவ்வாறு அமைந்திருந்தது?

8. நச்சினார்க்கினியரை அறிமுகப்படுத்துக.

9. பேராசிரியரின் பொருளதிகார உரை எத்தனை இயல்களுக்கு மட்டும் கிடைத்துள்ளது? அவ்வியல்கள் யாவை?

10. பழங்குடி என்ற சொற்றொடருக்குப் பரிமேலழகர் தரும் விளக்கத்தினைக் குறிப்பிடுக.

11. அடியார்க்கு நல்லாரின் உரையில் குறிப்பிடப்படும் மறைந்துபோன தமிழ் நூல்களைக் கூறுக.

12. உரைப்பாயிரம் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. வாய்மொழி வழியாக வளர்ந்து வந்த உரையின் இயல்பினைத் தொகுத்துரைக்க.

14. உரையாசிரியர்களின் பன்நூற் புலமையினை எடுத்தியம்புக.

15. உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா? விளக்குக.

16. இளம்பூரணரின் தொல்காப்பிய உரையினை மதிப்பிடுக.

17. நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரை குறித்து எழுதுக.

18. பரிமேலழகர் உரைக்கும் மணக்குடவர் உரைக்கும் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

19. அடியார்க்கு நல்லார் உரையின் இயல்பினை விளப்புக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. உரைநடையின் தோற்றத்திற்கான காரணத்தினைக் கட்டுரைக்க.

21. உரையாசிரியர்களின் உரை வகையினை விவரிக்க.

22. சேனாவரையரின் இலக்கண உரைத்திறனை ஆய்க.

23. பரிமேலழகரும் திருக்குறள் உரைச்சிறப்பும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

24. புலியூர் கேசிகனின் சிலப்பதிகார உரைச்சிறப்பிற்குச் சான்று பகர்க.

———————